நாள்: 15.07.2026

MCOP 66/2015
பெயர் வெற்றிவேல்
ம.சா.2

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்தவுடன் நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் விபத்து சமயம் கீளினராக இருந்தேன் என்பதை நிரூபணம் செய்ய உறுப்பினர் அட்டை உள்ளதா என்றால் இல்லை. கீளினருக்கு அப்போது அடையாள அட்டை இல்லை. நான் தற்சமயம் லாரி ஓட்டுநராக உள்ளேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் கீளினராக இல்லை என்றும், தற்போதும் ஓட்டுநராக இல்லை என்றும், வழக்கிற்காக கீளினராக இருந்தேன் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் யார் இறந்து போனார் என்று எனக்கு தெரியாது என்றும், எனக்கு விபத்து பற்றி தெரியாது என்றும், நான் விபத்து சமயம் முருகன் உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர் எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்